புதிய தலைமுறை அறக்கட்டளை

இளைஞர் மேம்பாடு, சுகாதாரம் மற்றும் கிராமப்புறக்கல்விக்காக பணியாற்றும் ஓர் மக்கள் இயக்கம் - இந்தியாவின் மிகப்பெரிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் ஒன்று

(An ISO 9001:2015 Certified NGO)

ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ மன்றம்

இந்திய சிறு மற்றும் கிராமப்புறத் தொழில்களுக்கான மையம்
(புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஓர் அங்கம்)

ISRB/SEMINAR/014

# “சரியான தொழிலை தேர்வு செய்வதும், விடாமுயற்சியும், சுயதொழில் வெற்றிக்கான வழிமுறைகள்.”




புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஆலோசகர் எம். சுப்பிரமணியன் அவர்கள் துவக்க உரையாற்றிய காட்சி

## பெரம்பலூர் மாவட்ட இளைஞர்களுக்கு ஏற்றுமதி தொழில் குறித்த வழிகாட்டுதல்

கருத்தரங்கம்

## ஏற்றுமதி தொழில் வாய்ப்புகள் & தொழில் தொடங்குவதற்கான வழிமுறைகள்

செப்டம்பர் 3 2023

இடம்: அஸ்வின்ஸ் பார்ட்டி ஹால்,
புதிய பேருந்து நிலையம் எதிரில், பெரம்பலூர்

- புதிய தலைமுறை அறக்கட்டளை ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ மன்றம் மூலம் இளைஞர்களுக்கு சுயதொழில் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகிறது. இளைஞர்கள் வாய்ப்பை சரியாக பயன்படுத்தி வாழ்வில் முன்னேற்றம் காண வேண்டும்.

- பெரம்பலூர் மாவட்டத்தில் சின்ன வெங்காயம் சாகுபடி அதிகம் உள்ளது. அதேபோல் தழுதாழையில் மரபொம்மைகள் தயாரிப்பு அதிகம். நமது மாவட்டத்திலும் ஏற்றுமதி வாய்ப்புகள் உள்ளன. இளைஞர்கள் ஏற்றுமதி தொழிலை தொடங்க முன்வரவேண்டும்.

- இளைஞர்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும், தனக்கென ஒரு இலக்கை நிர்ணயித்துக் கொண்டு அந்த இலக்கினை அடைவதற்கு விடாமுயற்சியுடன் போராட வேண்டும்.

**திரு.எம். சுப்பிரமணியன்**
ஆலோசகர், புதிய தலைமுறை அறக்கட்டளை
சென்னை

புதிய தலைமுறை அறக்கட்டளை

ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ மன்றம்
இந்திய சிறு மற்றும் கிராமப்புறத் தொழில்களுக்கான மையம்
(புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஓர் அங்கம்)

இளைஞர் மேம்பாடு, சுகாதாரம் மற்றும் கிராமப்புறக்கல்விக்காக பணியாற்றும் ஓர் மக்கள் இயக்கம் - இந்தியாவின் மிகப்பெரிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் ஒன்று

பெரம்பலூர் விக்டரி லயன்ஸ் சங்கம்

அஸ்வின்ஸ்
உள்ளம் விரும்பும் சுவைகளின் இல்லம்
பெரம்பலூர்

புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ மன்றம், பெரம்பலூர் விக்டரி லயன்ஸ் சங்கம் மற்றும் அஸ்வின்ஸ் குழுமம் இணைந்து ஏற்றுமதி தொழில் வாய்ப்புகள் & தொழில் தொடங்குவதற்கான வழிமுறைகள் குறித்த கருத்தரங்கம் செப்டம்பர் 3, 2023 அன்று பெரம்பலூர் அஸ்வின்ஸ் பார்ட்டி ஹால், பெரம்பலூரில் நடத்தியது.

புதிய தலைமுறை அறக்கட்டளையின், பொதுமேலாளர் – திட்டங்கள் ச.சுரேஷ் கண்ணன், பேசுகையில் நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்களை அறிமுகம் செய்து வைத்து அதனைத் தொடர்ந்து அறக்கட்டளையின் திட்டங்கள் பணிகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். தொடர்ந்து பேசுகையில் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுவதற்கு அனைத்து உதவிகளையும் மிகச்சிறப்பாக செய்து கொடுத்த அஸ்வின்ஸ் குழுமத்தின் நிர்வாகத்திற்கும், பெரம்பலூர் விக்டரி லயன்ஸ் சங்கத்தினர் அனைவருக்கும் அறக்கட்டளையின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

பின்னர் சிறப்புரையாற்றிய புதிய தலைமுறை அறக்கட்டளையின் பெரம்பலூர் மாவட்ட கௌரவ அமைப்பாளர் குறிஞ்சி சிவக்குமார் அவர்கள் பேசுகையில் ஏற்றுமதி தொழில் குறித்த கருத்தரங்கத்தினை எங்கள் மாவட்டத்தில் நடத்துவற்கு ஏற்பாட்டு செய்து கொடுத்து சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கும் அறக்கட்டளைக்கும் தன்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொண்டார்.



பயிற்சியாளர் சிவராமன் அவர்களுக்கு அறக்கட்டளையின் ஆலோசகர், எம். சுப்பிரமணியன் அவர்கள் சால்வை அணிவித்து மரியாதை செய்த காட்சி

கருத்தரங்கத்தினை துவக்கிவைத்து துவக்க உரையாற்றிய எம். சுப்பிரமணியமன், ஆலோசகர், புதிய தலைமுறை அறக்கட்டளை பேசுகையில் புதிய தலைமுறை அறக்கட்டளை 2010 ஆம் ஆண்டு டாக்டர். ப.சத்தியநாராயணன் அவர்களால் துவங்கப்பட்டது. கிராமங்கள் முன்னேறினால் நாடு முன்னேற்றமடையும் என்ற கருத்தில் கவனம் கொண்டு சமூக சிந்தனை, போன்ற பல்வேறு தளங்களில் தனது பணியினை



அஸ்வின்ஸ் குழுமத்தில் தலைவர் லயன் கே.ஆர்.வி. கணேசன் மற்றும் புதிய தலைமுறை அறக்கட்டளையின் பெரம்பலூர் மாவட்ட கௌரவ அமைப்பாளர் குறிஞ்சி சிவக்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றிய காட்சி

சிறப்பாக செய்து வருவது மனதுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்றும் கூறினார்.மேலும் பேசுகையில் பெரம்பலூர் மாவட்டத்தில் மரபொம்மைகள்

**புதிய தலைமுறை அறக்கட்டளையின் செயல்திட்டங்கள்**

- கிராமப்புறக் கல்வி
- சிறு மற்றும் கிராமப்புற வணிக மேம்பாடு
- வேலைவாய்ப்பு வழிகாட்டு மன்றம்
- மருத்துவ முகாம்கள்
- பெண்கள் முன்னேற்றம்
- யோகா பயிற்சிகள்
- சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு

தயாரிப்பவர்கள் அதிகம் உள்ளனர், தொழில் தொடங்குவோர் முதலில் தன்னம்பிக்கையினை வளர்த்துக்கொள்ள வேண்டும், முயற்சியினை தொடர்ந்து செய்ய வேண்டும், விடா முயற்சி, பயிற்சியின் மூலம் தொழில் தொடர்பான தகவல்களை சேகரிக்க வேண்டும் என்றும், ஏற்றுமதி தொழில் வாய்ப்புகள் மற்றும் தொழில் தொடங்கும் வழிமுறைகள் குறித்த கருத்தரங்கில் ஆர்வமாக கலந்து கொள்ள வந்திருக்கும் அனைவருக்கும் தன்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.

அஸ்வின்ஸ் குழுமத்தின் தலைவர் கே.ஆர்.வி கணேசன் பேசுகையில் ஏற்றுமதி தொழிலில் வாய்ப்புகள் அதிகம் உள்ளன, தொழில் குறித்து விரிவான தகவல்களை இங்கே வழங்குவதற்காக வந்திருக்கும் பயிற்சியாளர் சிவராமன் அவர்களுக்கும் இதுபோன்ற ஒரு முயற்சியினை எடுத்து இக்கருத்தரங்கத்தினை சிறப்பாக நடத்தி கொண்டிருக்கும் அறக்கட்டளை குழுவினர்க்கு தன்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்.



பயிற்சியாளர் சிவராமன் அவர்கள் சிறப்புரையாற்றிய காட்சி


கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர்

இந்த கருத்தரங்கில் திரு. எஸ். சிவராமன், Advocate, Consultant & Trainer,. Export - Import / Customs / MSME Chennai அவர்கள் பேசுகையில் ஏற்றுமதி வர்த்தக வாய்ப்புள்ள பொருட்களையும் நாடுகளையும் கண்டறியும் முறைகள், ஏற்றுமதி செய்வதற்கு என்ன என்ன பொருட்கள் எந்த நாடுகளுக்கு அதிகம் ஏற்றுமதி ஆகிறது போன்ற தகவல்களை தெரிந்து கொள்ள https://exportpotential.intracen.org என்ற இணையதளத்தின் மூலம் கண்டுபிடிக்கும் வழிமுறைகளை தெளிவாக எடுத்துரைத்தார். ஏற்றுமதி தொழில் தொடங்குவதற்கு முதலில் பொருளை தேர்ந்து எடுக்க வேண்டும், பின்னர் சரியான திட்டமிடல் வேண்டும், சிறிய அளவில் ஏற்றுமதி தொழிலை தொடங்கி மெதுவாக விரிவுபடுத்த வேண்டும் என்று கூறினார். பொருளுக்கு விலை நிர்ணயம் செய்யும் வழிமுறைகள் குறித்து எடுத்துரைத்தார்.

ஏற்றுமதி சந்தை வாய்ப்புகள் அதிகம் உள்ள நாடுகள், நிறுவனத்தை பதிவு செய்யும் வழிமுறைகள், ஏற்றுமதிக்கு தேவையான ஆவணங்களை தயார் செய்யும் வழிமுறைகள் குறித்தும் பல்வேறு இணையதளங்கள் – ஏற்றுமதி & இறக்குமதி குறித்த சர்வதேச வர்த்தகத் தகவல்கள் / புள்ளிவிவரங்களை www.trademap.org, www.commerce.gov.in போன்ற இணையதளங்களின் மூலம் தெரிந்து கொள்ளவது எப்படி என்றும் விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும் பல்வேறு ஏற்றுமதி தொடர்பான இணையதளங்கள் போன்றவற்றில் உள்ள தகவல்கள் குறித்தும் கூறினார்.

## மரபொம்மைகள் உலக சந்தை



உலகளாவிய மர பொம்மைகளின் சந்தை வாய்ப்புகள் அளவு 2022 இல் 24 பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப்பட்டது மற்றும் 2031 ஆம் ஆண்டில் 34.4 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. 2023-2031 காலக்கட்டத்தில் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் 3.90% ஆக விரிவடையும். குழந்தைகளை மகிழ்விப்பதற்கும் கல்வி கற்பதற்கும் மரப் பொருட்களை ஏற்றுக்கொள்வதே சந்தை வளர்ச்சிக்குக் காரணம். மரத்தாலான பொம்மைகள் பொதுவாக நச்சுத்தன்மையற்ற பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகின்றன, இது குழந்தைகளின் வளர்ச்சியில் பயன்பாட்டிற்கு பாதுகாப்பானது.

கருத்தரங்கில் கலந்து கொண்ட கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த பாலாஜி பேசுகையில், ஏற்றுமதி தொழில் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் வெகு நாட்களாக எனக்குள் இருந்து வந்தது. ஏற்றுமதி குறித்து அடிப்படை கூடத் தெரியாமல் தான் இங்கு வந்தேன், ஆனால் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டதன் மூலம், பயிற்சியாளர் சிவராமன் அவர்கள் ஏற்றுமதி என்றால் என்ன ? தொழில் தொடங்குவதற்கான ஆவணங்கள் குறித்தும், பொருட்கள் தேர்ந்தெடுக்கும் முறைகள் போன்ற பல்வேறு தகவல்களை தெள்ளத் தெளிவாக



அனைவருக்கும் புரியும்படி மிக எளிமையாக எடுத்துரைத்தார். புதிய தலைமுறை அறக்கட்டளை குழுவினர்க்கும் என் சிரம் தாழ்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார். தஞ்சாவூர், திண்டுக்கல், தேனி, மதுரை, சென்னை, கன்னியாகுமரி, நாமக்கல், கிருஷ்ணகிரி, விருதுநகர், திருவள்ளூர், மயிலாடுதுறை, திருப்பூர், தர்மபுரி, விழுப்புரம், கடலூர், கோயம்புத்தூர், வேலூர் போன்ற ஊர்களில் இருந்து 70க்கும் மேற்பட்ட சுயதொழில் முனைவோர்கள் கலந்து கொண்டனர்.

புதிய தலைமுறை அறக்கட்டளை

இளைஞர் மேம்பாடு, சுகாதாரம் மற்றும் கிராமப்புறக்கல்விக்காக பணியாற்றும் ஓர் மக்கள் இயக்கம் - இந்தியாவின் மிகப்பெரிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் ஒன்று

ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ மன்றம்

இந்திய சிறு மற்றும் கிராமப்புறத் தொழில்களுக்கான மையம்

(புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஓர் அங்கம்)

பெரம்பலூர் விக்டரி லயன்ஸ் சங்கம்

அஸ்வின்ஸ்

உள்ளம் விரும்பும் சுவைகளின் இல்லம்

பெரம்பலூர்

## கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு பங்கேற்பு சான்றிதழ் வழங்கிய காட்சி








## புதிய தலைமுறை அறக்கட்டளையின் பெரம்பலூர் மாவட்டத்திற்கு சில பரிந்துரைகள்

1. இளைஞர்களுக்கு சுயதொழில் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்ததுவதற்கு அரசு சார்பில் சுயதொழில் விழிப்புணர்வு கருத்தரங்கங்கள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளை அதிக அளவில் பெரம்பலூர் மாவட்டத்தில் தாலுகா தோறும் நடத்த வேண்டும்.

2. தொழில்குறித்த கருத்தரங்கங்களை நடத்துவதுற்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்க வேண்டும்.

3. தமிழக அரசின் கடன் மற்றும் மானியத்திட்டங்கள் குறித்த குறைந்த அளவே விழிப்புணர்வு மக்களிடம் உள்ளது. அதிக அளவு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். கடன் பெறும் நடைமுறைகளை எளிதாக இருக்கும்படி அமைக்க வேண்டும்.

4. பெரம்பலூர் மாவட்ட இளைஞர்களுக்கு தொழில் சுற்றுலா தொடர்ந்து நடத்த வேண்டும்.

5. புதிய தலைமுறை அறக்கட்டளை பெரம்பலூர் மாவட்ட தொழில் மையத்தோடு இணைந்து பணியாற்றுவதற்கு மிகுந்த ஆவலாக உள்ளது.

*ISRB Expo Forum (A Unit of Puthiya Thalaimurai Foundation)*
*No: 24, G.N. Chetty Road, T.Nagar, Chennai - 600 017 | Email: info@isrbexpo.org*
*Mobile: 8754417500, 8754417322 | www.isrbexpo.org*